RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 199 | ஜூலை.22 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## ராஜேந்திர சோழனுக்கு விழா எடுப்பதில் பெருமை கொள்கிறோம்: அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்

அரியலூர்: ஜூலை.22-

கங்கைகொண்ட சோழபுரம் கோயில் எழுப்பிய ராஜேந்திர சோழனுக்கு விழா எடுப்பதில் பெருமை கொள்கிறோம் என போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் ஜூலை 23ம் தேதி மாமன்னன் ராஜேந்திர சோழனின் ஆடி திருவாதிரை திருவிழா வெகு விமரிசையாக தமிழக அரசு சார்பில் கொண்டாடப்பட உள்ளது. விழாவையொட்டி, கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள அரசுப் பள்ளி வளாகத்தில் பந்தல் அமைக்கும் பணிகள் நடைபெறுவதை மாநில போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், ஆட்சியர் பொ. ரத்தினசாமி ஆகியோர் இன்று (ஜூலை 21) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அப்போது, அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறியதாவது: ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஜூலை 23ம் தேதி காலை மங்கள வாத்திய நிகழ்ச்சியுடன் விழா தொடங்குகிறது. விழாவில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் ரா.ராஜேந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, சிதம்பரம் மக்களவை உறுப்பினர் திருமாவளவன் மற்றும் நான் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளோம்.

மேலும், கலை பண்பாட்டுத்துறை சார்பில் கலை நிகழ்ச்சிகளும், முனைவர் பர்வீன் சுல்தானா தலைமையில் சோழர்கள் புகழுக்கு பெரிதும் காரணம் நிர்வாகத் திறனே! போர் வெற்றிகளை! என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறுகிறது. மாலையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் மாமன்னர் ராஜேந்திர சோழனின் வரலாற்று நாடகமும், நையாண்டி மேளம், கரகாட்டம், மயிலாட்டம், கிராமிய பாடல்கள் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கலைஞர்கள் நடத்தவுள்ளனர்.

காட்டைத் திருத்தி நகர் புறங்கள் மற்றும் கிராமப் புறங்களை அமைத்து மக்கள் பயன்பெறும் வகையில் பொன்னேரி வெட்டி, பெருமை மிக்க கங்கைகொண்ட சோழபுரம் கோயில் எழுப்பிய மாமன்னர் ராஜேந்திர சோழனுக்கு விழா எடுப்பதில் பெருமை கொள்கிறோம். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "இரவு நேரங்களில் தொலைதூர அரசுப் பேருந்துகளில் பெயர் பலகையின் முகப்பு விளக்குகளை அனைத்து சில ஓட்டுநர்கள் செல்வதாக ஆய்வில் கண்டறியப்பட்டு, பெயர் பலகைகளை எரியும் வண்ணம் செல்ல போக்குவரத்து மேலாண் இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆட்சியில் பங்கு தர நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல என எடப்பாடி பழனிசாமியும், அண்ணாமலையும் கூறிவருவது அவர்களுக்குள் பங்கு பிரிப்பதில் என்ன பிரச்சினை வந்துள்ளது எனத் தெரியவில்லை. அதனால் இந்த நாடகத்தை துவக்கியிருக்கிறார்கள். நாடகம் உச்ச கட்டத்தை அடையும் பொழுது முடிவுகள் என்ன என தெரியவரும்." என்றார்.

## தலைமைச் செயலாளர்களுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: ஐகோர்ட் முடித்துவைப்பு

சென்னை: ஜூலை.22-

தலைமைச் செயலாளர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதில் இந்த நீதிமன்றம் மகிழ்ச்சி கொள்ளவில்லை. மாறாக தர்ம சங்கடமான நிலையிலேயே இருப்பதாக தெரிவித்த சென்னை உயர் நீதிமன்றம், முன்னாள் இந்நாள் தலைமைச் செயலாளர்களுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைத்தது.

பணியின் போது உயிரிழந்த அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பாக கால நிர்ணயம் செய்வது குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்க வேண்டும் எனவும், கருணை அடிப்படையில் வேலை கோருவோரின் மாநில அளவிலான பட்டியலை தயாரிக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளதா என மூன்று மாதங்களில் அறிக்கை அளிக்கவும் கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவை அமல்படுத்தாதது தொடர்பாக, முன்னாள் தலைமைச் செயலாளர் சிவதாஸ்மீனா, தற்போதைய தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஆகியோருக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றம், தாமாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு எடுத்தது.

இந்த வழக்கு நீதிபதி பட்டு தேவானந்த் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், முன்னாள் தலைமைச் செயலாளர் சிவதாஸ்மீனா, தற்போதைய தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஆகியோர் நேரில் ஆஜராகியிருந்தனர்.

தற்போதைய தலைமைச் செயலர் முருகானந்தம் தரப்பில், கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க கால நிர்ணயம் செய்வது தொடர்பாக ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த ஜூன் 16ஆம் தேதி இந்த குழு கூடி, கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு கோருவோரின் பட்டியலை மாநில அளவில் பராமரிப்பது என முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா தரப்பில், இது சம்பந்தமாக அரசுப் பணியாளர் விதிகளில் திருத்தம் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இருவரும் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரி மனுக்களையும் தாக்கல் செய்திருந்தார்கள்.

இதை ஏற்றுக்கொண்டு, தற்போதைய தலைமைச் செயலாளர் நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த எடுத்த நடவடிக்கை குறித்து திருப்தி தெரிவித்த நீதிபதி, இருவர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

தலைமைச் செயலாளர்கள் எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதில் இந்த நீதிமன்றம் மகிழ்ச்சி கொள்ளவில்லை என்றும், மாறாக தர்ம சங்கடமான நிலையிலேயே இருப்பதாகவும் நீதிபதி பட்டு தேவானந்த் குறிப்பிட்டார்.

நீதிமன்ற உத்தரவுகளை குறித்த காலத்தில் அமல்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை பிறப்பித்த முன்னாள் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா, அதை மீறி இருப்பது துரதிஷ்டவசமானது என நீதிபதி சுட்டி காட்டினார்.

பின்னர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக அரசு பணியாளர் விதிகளில் இரண்டு வாரங்களில் திருத்தம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, அதன் நகலை 3 வாரங்களில் உயர்நீதிமன்ற நீதித்துறை பதிவாளர் பார்வைக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

# கடந்த 4 ஆண்டில் மகளிருக்கு ரூ.1.21 லட்சம் கோடி கடனுதவி: மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை

சென்னை: ஜூலை.22-

கடந்த 4 ஆண்டுகளில் 2.50 கோடி சுய உதவிக் குழு மகளிருக்கு ரூ.1.21 லட்சம் கோடி வங்கிக் கடனுதவி வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை படைத்துள்ளது.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார தேவையை கருத்தில் கொண்டு, அவற்றின் செயல்பாடுகளுக்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த 2021 22ம் நிதியாண்டில் 4.08 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.21,392 கோடியும், 2022 23ம் நிதியாண்டில் 4.49 லட்சம்





குழுக்களுக்கு ரூ.25,642 கோடியும், 2023 24ம் நிதியாண்டில் 4.79 லட்சம் குழுக்களுக்கு ரூ.30,074 கோடியும் வங்கிக் கடனுதவிகள் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து கடந்த 2024 25ம் நிதியாண்டில் 4.84 லட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.35,189 கோடி கடன் வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை படைத்தது.

இதன் தொடர்ச்சியாக 2025 26ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில், சுய உதவிக்குழு மகளிருக்கு ரூ.37 ஆயிரம் கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும் என தமிழக முதல்வர் அறிவித்தார். அதன்படி நடப்பாண்டில் கடந்த ஜூலை 18ம் தேதி வரை 1.04 லட்சம் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 13.58 லட்சம் மகளிருக்கு ரூ.9,113 கோடி வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் திமுக அரசு பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் மொத்தமாக 19.26 லட்சம் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 2.50 கோடி மகளிருக்கு ரூ.1.21 லட்சம் கோடி வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ராசி மணலில் அணை கட்டினால் 62 டிஎம்சி தண்ணீர் சேமிக்கலாம்: விவசாயிகளின் கோரிக்கைக்கு இபிஎஸ் ஆதரவு

திருவாரூர்: ஜூலை.22-

ராசி மணலில் அணை கட்டினால் 62 டிஎம்சி தண்ணீரை சேமிக்க முடியும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கு, அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி ஆதரவு தெரிவித்து பேசினார்.

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சார பயணத்தை மேற்கொண்டு வரும் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, திருவாரூரில் நேற்று விவசாயிகளை சந்தித்தார்.

அப்போது அவர் விவசாயிகள் மத்தியில் பேசியதாவது: மேட்டூர் அணையில் திறக்கப்படும் தண்ணீர், வரும் வழியில் உள்ள நகரப்பகுதி கழிவுநீர் கலந்து மாசுபடுவதால் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பதற்காகவும், கடைகோடி விவசாயிக்கும் சுத்தமான தண்ணீர் கிடைக்க வேண்டும், 20 மாவட்டங்களில் குடிநீர் ஆதாரமாக விளங்கும் காவிரி நீர் சுத்தமாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், கடந்த அதிமுக ஆட்சியின் போது, 'நடந்தாய் வாழி காவேரி' என்கின்ற திட்டம் வகுத்து, மத்திய அரசிடம் நிதி ஒதுக்கீடு கேட்கப்பட்டது.

அதனடிப்படையில், குடியரசு தலைவர் ஒப்புதலும் பெற்று ரூ.990 கோடி நிதி ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. ஆனால் அந்தத் திட்டத்தை இந்த அரசு கிடப்பில் போட்டு வைத்துள்ளது. ராசி மணலில் அணை கட்ட வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு கட்டினால் 62 டிஎம்சி தண்ணீரை தேக்கி வைக்க முடியும். அதனால், அந்த விவசாயிகளின் கோரிக்கையை நாம் ஆதரிக்கிறோம்.



இந்தியா கூட்டணியில் உள்ள இன்றைய ஆட்சியாளர்கள், பிரதான பிரச்சினையாக உள்ள காவிரி பிரச்சினையை கண்டுகொள்ளாமல் உள்ளனர். காங்கிரஸ் கட்சியும் அவர்களது கூட்டணியில்தான் உள்ளது. எனவே, அவர்கள் இதனை பேசி தீர்க்கலாம். 39 எம்.பிக்களை வைத்துள்ள ஆளும் திமுக அரசு, இதில் கவனம் செலுத்துவதில்லை.

திமுக, மத்திய அரசில் காங்கிரஸ், தேவகவுடா, ஐ.கே.குஜரால் உள்ளிட்டோர் ஆட்சியில் 16 ஆண்டு காலம் திமுக இடம்பெற்று இருந்தது. திமுகவினர் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது, தமிழ்நாட்டை பற்றியும், மக்களை பற்றியும் பேச மாட்டார்கள். விவசாயிகள் பிரச்சினையையும் பேச மாட்டார்கள். ஆட்சியில் இல்லாதபோது பேசுவார்கள்.

கோதாவரி காவிரி இணைப்பு நிறைவேற்றப்பட்டால் 125 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும். அதை நிறைவேற்ற பிரதமரிடம் கடிதம் கொடுக்கப்பட்டது. திட்டப்பணி அறிவிப்பும் கொடுத்தனர். அதிமுக அமைச்சர்கள் வேலுமணி, ஜெயக்குமார் இருவரையும் அனுப்பி தெலங்கானா முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. தெலங்கானா முதல்வரும் ஏற்றுக்கொண்டார். ஆந்திரா முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியும் ஏற்றுக்கொண்டார்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் தென் மாநிலத்தில் உள்ள நதிநீர் பிரச்சினை தீர்ந்து விடும். குடிநீருக்கு தேவை என தண்ணீரை எடுத்து வந்தால், மத்திய அரசின் அனுமதியில்லாமல் நிறைவேற்றலாம் என்றும் தெலங்கானா, ஆந்திர முதலமைச்சர்களால் ஆலோசனை தரப்பட்டது. அத்தகைய திட்டத்தையும் தொடராமல் திமுக அரசு கிடப்பில் போட்டு விட்டது.

காவிரி நீரை தமிழகத்துக்கு வழங்குவதில் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, கர்நாடக அரசு நடந்து கொள்வதில்லை. கர்நாடகாவில் அணை நிரம்பிய பிறகே நமக்கான தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால் குறித்த காலத்தில் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. அதனால் விளைச்சல் குறைகிறது.

டெல்டா மாவட்டத்தில் 36 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் கால்வாய் சீரமைப்பிற்காக திட்டமிடப்பட்டது. இவை அமையும்போது 20 சதவீத நீர் மிச்சமாகும். கடைமடை பகுதிவரை தண்ணீர் சென்று சேறும். இந்த வருடம் தண்ணீர் திறந்துவிட்டும் நாகை, மயிலாடுதுறை கடைமடை வரை தண்ணீர் வந்து சேரவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர். கடைக்கோடி வரை தண்ணீர் செல்ல நவீன முறையில் கால்வாய்களை சீரமைக்க வேண்டும். இந்த திட்டமும் மத்திய அரசிடம் அளிக்கப்பட்டு அரசும் ஏற்றுக்கொண்டது.

தற்போதைய அரசாங்கம், மத்திய அரசோடு இணக்கமின்றி உள்ளதால் இந்த திட்டங்களை கிடப்பில் போட்டு விட்டனர். நீர் மேலாண்மைக்கென தனி பிரிவை செயல்படுத்த வேண்டும். வீணாக கடலில் சென்று தண்ணீர் கலப்பதை தடுக்க வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் ஆசியாவிலேயே பெரிய கால்நடைப்பூங்கா ஆயிரத்து 50 கோடி ரூபாய் மதிப்பில் ஆயிரத்து 20 ஏக்கரில் அமைக்கப்பட்டு ஒரு பகுதி மட்டும் திறக்கப்பட்டது. கால்நடை மருத்துவக்கல்லூரி முடியும் தருவாயில் முழுக்க முழுக்க விவசாயிகளுக்கு பயன்படும் இந்த திட்டத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பூட்டி வைத்து விட்டனர்.

அந்த திட்டத்தின் நோக்கம், கலப்பின பசுக்களை உருவாக்கி நம் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப விவசாயிகளுக்கு இலவசமாக கொடுப்பதாகும். அதிமுக ஆட்சி அமையும்போது கால்நடைபூங்கா திட்டம் நிறைவேற்றப்படும். விவசாயிகளுக்கு வருவாய் தரக்கூடிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்" என்றார்.

தொடர்ந்து வர்த்தக சங்க நிர்வாகிகளையும் சந்தித்து கோரிக்கைகளை பழனிசாமி கேட்டறிந்தார். இந்த சந்திப்பு நிகழ்வின்போது முன்னாள் அமைச்சர் ஆர்.காமராஜ் மற்றும் கட்சியினர் உடன் இருந்தனர்.



■ சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர்.அதுல்ய மிஸ்ரா ,மலேசியாவில் 2025 ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 1 வரை நடைபெறும் 10வது ஆசிய பாரா டேக் ஒன் டு சாம்பியன்ஷிப் மற்றும் 13வது ஆசிய இளையோர் டேக்வாண்டு சாம்பியன்ஷிப்பில் இந்திய அணிக்காக சார்பில் பங்கேற்கும் 10 பாராவீரர் வீராங்கனைகளுக்கு.1 இளையோர் வீராங்கனைக்கும் செலவீனத் தொகையாக தமிழ்நாடு சாம்பியன்ஷிப் அறக்கட்டளையின் சார்பாக ரூ.11 லட்சம் மதிப்பிலான காசோலைகளையும்,ஈரோட்டைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனை ஸ்நேகா.எஸ் அவர்களுக்கு ழிமிஷி பயிற்சி டிப்ளோமா பெற கல்வி உதவித் தொகையாக ரூ.2.25 லட்சம் மதிப்பிலான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து நேற்று (21.07.2025) வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் அப்துல் மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட வருவாய் அதிகாரி வே.மணிகண்டன்,பொது மேலாளர் எல்.சுஜாதா ஆகியோர் பங்கேற்றனர்..






# தேவாரம் இமயம் லைன் சங்கம் நடத்தும் 2025-2026 ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பணியேற்பு விழா

தேனி, ஜூலை.22-

தேனி மாவட்டம் சங்கராபுரத்தில் தேவாரம் இமயம் லயன்ஸ் சங்கம் நடத்தும் 2025 - 2026 ம் ஆண்டிற்கான 4வது புதிய நிர்வாகிகள் பணியேற்பு விழா 2007-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குமேல் கோகுல் மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் புதிய நிர்வாகிகளை பணியில் அமர்த்துபவர். ஆறுமுகம் மாவட்ட முதல் துணை ஆளுநர், புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்து வைப்பவர் .ராதாகிருஷ்ணன் மாவட்ட GST ஒருங்கிணைப்பாளர் தேனி - திண்டுக்கல், சேவை திட்டங்களை துவக்கி வைப்பவர்கள். சுப்புராஜ் மாவட்ட GLT ஒருங்கிணைப்பாளர் தேனி - திண்டுக்கல் மற்றும் PMJF Lion . ரவீந்திரன் மாவட்ட GMT ஒருங்கிணைப்பாளர் தேனி - திண்டுக்கல், நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளர்களாக .ஸ்டாலின் ஆரோக்கியராஜ் மாவட்ட GLT ஒருங்கிணைப்பாளர் மதுரை - சிவகங்கை, விழா ஒருங்கிணைப்பாளர் .செல்வம் பட்டய தலைவர் தேவாரம் இமயம் லயன்ஸ் சங்கம். முன்னாள் நிர்வாகிகள். சேகர் தலைவர், மதன் செயலாளர், ரெங்கராஜன் பொருளாளர். தேவாரம் இமயம் லயன் சங்கம் 2025 - 2026 கனவு மெய்ப்பட வேண்டும் நிர்வாகிகள் .முத்து வெங்கட்ராமன் தலைவர், சோலை முருகன் செயலாளர், மணிமாறன் பொருளாளர் புதியதாக பதவி ஏற்றுள்ளனர். இந்நிகழ்ச்சியின் முக்கிய நிர்வாகஸ்த்தவர்கள் பட்டய தலைவர் மற்றும் நிர்வாகம், முன்னாள் தலைவர், முதல்நிலை துணைத் தலைவர், இரண்டாம் நிலை துணைத் தலைவர், துணைச் செயலாளர், துணை பொருளாளர், நிஷிஜி ஒருங்கிணைப்பாளர், GMT ஒருங்கிணைப்பாளர், GLT ஒருங்கிணைப்பாளர், மார்க்கெட்டிங் கமிட்டி, LCIF ஒருங்கிணைப்பாளர், சங்க ஒருங்கிணைப்பாளர், சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர், சங்க ஆலோசகர் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் புதிய உறுப்பினர்கள் . திலகர், ஹாரிஸ், சக்திவேல், பாஸ்கரன், .ராம்குமார் மற்றும் பதவியேற்பு விழாவிற்கு ஏராளமான பொதுமக்களும் லயன்ஸ் சங்க உறுப்பினர்களும் திரளாக கலந்து கொண்டனர்.



# சத்துவாச்சாரியில் A4 மருத்துவமனை திறப்பு விழா

வேலூர், ஜூலை.22-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரியில் A4 மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பார்களாக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் ,வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆகியோர் ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவர் வீனஸ் நரேந்திரன் (திமுக), முன்னாள் அமைச்சர் டாக்டர். வி.எஸ். விஜய் மற்றும் மருத்து வர்கள், செவிலியர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# 100 நாள் வேலை வழங்காததை கண்டித்து தூம்பகுளம் புதூர் கிராம பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு

மதுரை, ஜூலை.22-

மதுரை மாவட்டம் திருமங்கலம் அடுத்த தூம்பகுளம் அருகே உள்ள புதூர் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் 50க்கும் மேற்பட்டோர் 100 நாள் வேலை வழங்காததை கண்டித்து 100 நாள் வேலை அடையாள அட்டையோடு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாமில் 100 நாள் வேலை வழங்கக்கோரி மனு அளித்தனர்.

தொடர்ந்து அவர்கள் கூறுகையில் எங்கள் ஊருக்கு மட்டும் 100 நாள் வேலை தர மறுக்கின்றனர்.கிராமத்தில் பெரும்பாலானோர் 100 நாள் வேலையை நம்பி உள்ளனர். எங்கள் ஊருக்கு மட்டும் வேலை தர மறுப்பது எந்த விதத்தில் நியாயம்,வேலை வழங்க கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளோம் மேற்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் திருமங்கலம் டிஎஸ்பியிடம் மனு அளித்தும் சாலை மறியல் போராட்டம் செய்ய உள்ளோம் என்றனர்.




# நிறைந்தது மனம்: திருக்கோவில்களில் இலவச திருமண திட்டம்

தென்காசி, ஜூலை.22-

தென்காசி மாவட்டம் தமிழ்நாடு அரசின் இந்துசமய அறநிலையத்துறை சார்பில் திருக்கோவில்களில் திருமணம் நடத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது திருமணத்திற்கான திட்டச் செலவினம் 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மணமக்களுக்கு 4 கிராம் திருமாங்கல்யம், மணமகன் மற்றும் மணமகளுக்கு ஆடைகள் மற்றும் 20 நபர்களுக்கான விருந்து மற்றும் சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்படுகிறது. இந்த திட்டம் ஏழை மற்றும் எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

திருக்கோயில்கள் சார்பில் 2022 - 2023 ஆம் நிதியாண்டில் 500 இணைகளுக்கும், 2023 -2024 ஆம் நிதியாண்டில் 600 இணைகளுக்கும், 2024-2025 ஆம் நிதியாண்டில் 700 இணைகளுக்கும் என மொத்தம் 1800 இணைகளுக்கு திருக்கோயில்களின் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளி இணைகளுக்கு திருக்கோயில் திருமண மண்டபங்கள் கட்டணமில்லாமல் வழங்கப்படுவதோடு இதுவரை 156 மாற்றுத்திறனாளி இணைகளுக்கு தங்கத்தாலி மற்றும் சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

2025-2026 ஆம் நிதியாண்டில் முதற்கட்டமாக 576 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டு சீர் வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை இராஜா அண்ணாமலைபுரம் அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் இந்துசமய அறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 32 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தியதைத் தொடர்ந்து (02.07.2025) தென்காசி மாவட்டம் குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாத திருக்கோயிலில் நடைபெற்ற திருமணத்தில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் அவர்கள், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பழனிநாடார் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டத்தில் இந்து அறநிலையத்துறையின் சார்பில் 05 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது. இத்திருமணத்தில் கலந்து கொண்ட இணைகளுக்கு 4 கிராம் தங்கம், மாலை, புஷ்பம், பீரோ, கட்டில், மெத்தை, தலையணை, பாய், கைக்கடிகாரம், மிக்ஸி, பூஜை பொருட்கள், கிரைண்டர், சமையல் பாத்திரங்கள், எரிவாயு அடுப்பு, அடங்கிய சீர் வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் இலவச திருமண திட்டத்தின் மூலம் பயன் பெற்ற தம்பதிகள் தெரிவித்ததாவது

எங்கள் குடும்பம் மிகவும் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள குடும்பம். எங்களது பெற்றோர் கூலி வேலை தான் செய்கிறார்கள். எங்கள் திருமணத்தை நடத்தவதற்கு போதிய வசதி இல்லாத காரணத்தால் கோவிலில் இலவச திருமணத்திற்கு விண்ணப்பித்தோம். எங்களுக்கு இலவச திருமணத்திற்கு அனுமதி கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. எங்கள் திருமணம் மிகவும் விமரிசையாக எந்த ஒரு செலவும் இல்லாமல் நடைபெற்றது. எங்கள் திருமணத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு எங்களை வாழ்த்தியது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 4 கிராம் தங்கம் மற்றும் திருமண சீர்வரிசைப் பொருட்கள் அனைத்தும் கொடுத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் எங்களைப் போன்ற போன்ற ஏழை ஜோடிகளின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியை மனதார தெரி வித்துக்கொள்கிறோம்.



மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் வன்கொடுமையால் 16.05.2019 அன்று பாதிக்கப்பட்ட திருமதி.அர்ச்சனாதேவி(லேட்) என்பவரின் தாயார் திருமதி.சத்தியா என்பவருக்கு கருணை அடிப்படையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தின் கீழ் செயல்படும் கொண்டையம்பட்டி அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் சமையலர் பணி நியமனம் ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் வழங்கப்பட்டது.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் கடந்த அன்று மண்டலம் 3,வார்டு 60 கோவில் வழி பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கோவில் வழி பேருந்து நிலையத்தை பார்வை யிட்டு,ஆய்வு மேற்கொண்டனர்.உடன் உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணி,மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.




# தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஏலக்காய் நகர் லயன்ஸ் சங்கம் நடத்தும் 2025-2026 ஆண்டிற்கான 24 வது புதிய நிர்வாகிகள் பணியேற்பு விழா

தேனி, ஜூலை.22-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஏலக்காய் நகர் லயன்ஸ் சங்கம் நடத்தும் 2025 -2026 ஆண்டிற்கான 24 வது புதிய நிர்வாகிகள் பணியேற்பு விழா 2007 2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00மணிக்கு மேல் அம்மாகுளம் வர்த்தகர்கள் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பொறுப்பேற்றவர்கள். தனசேகரன் தலைவர், சந்திரன் செயலாளர், நாகேந்திரபாண்டி பொருளாளர், ஆகியவர்கள் பதவி ஏற்றினர். 2025-2026 புதிய நிர்வாகிகள் முன்னாள் தலைவர், முதல் துணைத் தலைவர், இரண்டாம் துணைத் தலைவர், துணைச் செயலாளர், LCIF ஒருங்கிணைப்பாளர், சங்க நிர்வாகம், உறுப்பினர் பெருக்க தலைவர், சேவை திட்ட தலைவர், மக்கள் தொடர்பு அலுவலர், மார்க்கெட்டிங் கமிட்டி என பல நிர்வாகிகள் பொறுப் பேற்றனர். இந்நிகழ்ச்சியில் புதிய நிர்வாகிகளை பணியில் அமர்த்தி சிறப்புரையாற்றியவர் . ஆறுமுகம் மாவட்ட முதல் துணை ஆளுநர், புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்து சிறப்புரை ராதாகிருஷ்ணன் மாவட்ட GST ஒருங்கிணைப்பாளர் தேனி - திண்டுக்கல், சேவை திட்டத்தை துவக்கி வைப்பவர்கள் பெஸ்ட் ரவி, சுப்புராஜ், .ரவீந்திரன், நவநீதன் மற்றும் விழா ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். ஏலக்காய் நகர் லயன்ஸ் சங்க சார்பில் பொன்னாடை போற்றி வரவேற்றனர். இந்நிகழ்ச்சியில் 7 மணிக்கு மேல் உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

# முப்படைகளில் பணியாற்றும் இராணுவ வீரர்கள் பணி நிறைவுக்கு முன் தங்களுடைய அடுத்தகட்ட முன்னெடுப்பு பணிகள் குறித்து தீர்மானிக்க வேண்டும்

## முன்னாள் படைவீரர்களுக்கான சுற்றுலா வழிகாட்டி திறன் பயிற்சி முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா அறிவுறுத்தல்

கன்னியாகுமரி, ஜூலை.22-

கன்னியாகுமரி மாவட்ட திறன் மேம்பாட்டு கழகம், மாவட்ட நிர்வாகம், முன்னாள் படைவீரர் நலன் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்துநிலையம் பூமாலை கட்டிட வளாகத்தில் நடத்திய முன்னாள் படைவீரர்களுக்கான சுற்றுலா வழிகாட்டி (Tourist Guide) திறன் பயிற்சி முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்து கொண்டு, பேசுகையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களை தொழில் முனைவர்களாக மாற்றும் நோக்கத்தில் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தினை செயல்படுத்தினார்கள். நமது தமிழ்நாட்டில் 1,27,000 முன்னாள் படைவீரர்கள் உள்ளார்கள். அவர்களில் முதற்கட்டமாக 10,000 முன்னாள் படைவீரர்களை தொழில்முனைவோர்களாக மாற்ற வேண்டும் என்பது நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலக்கு ஆகும். அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் படைவீரர் நலன் சார்பில் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் தற்போது வரை 52 முன்னாள் படைவீரர்களுக்கு திறன்பயிற்சி வழங்கி, 21 முன்னாள் படைவீரர்களுக்கு தற்காலிக கடன் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. அதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.




மேலும் முன்னாள் இராணுவத்தினரை சுற்றுலா வழிகாட்டிகளாக நியமிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 40 முன்னாள் படைவீரர்கள் தேர்வு செய்யப்பட்டு 1 மாதம் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக முன்னாள் இராணுவத்தினருக்கு புதிய வேலை வாய்ப்பு களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் தங்கள் இராணுவ சேவையில் பெற்ற அனுபவத்தின் வாயிலாக சுற்றுலா வழிகாட்டியாக சிறந்து விளங்க முடியும். சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டுவதற்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிப்புலமை மிக முக்கியமானது. நீங்கள் ஒரு வலைதளம் அல்லது சமூக ஊடகப் பக்கத்தின் மூலம் வலுவான சுற்றுலா தளங்கள் குறித்த புகைப்படங்கள், வீடியோக்கள் பதிவேற்றம் செய்வதன் வாயிலாக சுற்றுலாப்பயணிகளை ஈர்க்க முடியும்.

நீங்கள் பல்வேறு சுழ்நிலைகளில் பணியாற்றிய அனுபவத்தினை கொண்டுள்ளீர்கள். எனவே சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த வழிகாட்டுதலையும், பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும். உங்களுக்கு இப்பயிற்சியில் சுற்றுலா தளங்களை சுற்றிக்காட்டுவது மட்டுமல்லாமல் அந்த இடத்தின் முக்கிய தகவல்களை சுற்றுலா பயணிகளுக்கு தெரிவிக்கும் வண்ணம் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி முடித்தவர்கள் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா வழிகாட்டியாக செயல்படலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், முன்னாள் படைவீரர் நலன் துணை இயக்குநர் மேஜர் ஜெயகுமார், தென்னிந்திய உணவு விடுதி மேலாளர் திரு.சுந்தரம் சிங்காரம், முன்னாள் படைவீரர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



# வேலூரில், மண்டே பெட்டிஷனில் புகார் கொடுப்பது வேஸ்ட்: தீக்குளிக்க முயன்ற புலிமேடு கிராமத்தை சார்ந்த விவசாய முதியவர் காசி

வேலூர், ஜூலை.22-
வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கட்கிழமை, மக்கள் குறைதீர்வு நாள் முகாமில் முதியவர் தீகுளிக்க முயற்சி செய்தனர். காவல் துறையினர் மின்னல் வேகத்தில் தடுத்து வாலியில் குடிநீர் ஊற்றி கழுவி, முதலுதவி செய்தனர்.

வேலூர் மாவட்டம், அனைக்கட்டு தாலுகா, புலிமேடு கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி காசி (வயது 73) இவருக்கும் பக்கத்து நிலத்தை சேர்ந்த நடராஜன் என்பவருக்கும் நில தகராறு இருப்பதாகவும் அவரது குடும்பத்தினர் தன்னை தாக்குவதாகவும் இதுகுறித்து மூன்று முறை புகார் அளித்துள்ளார். இப்படி பல முறை ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் மனு அளித்தும் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இதனால் மன வேதனை அடைந்த விவசாய முதியவர் காசி 21072025 திங்கட்கிழமை சத்துவாச்சாரியில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மண்ணெண்ணய் கேனுடன் வந்து மண்ணெண்ணய் தலை மற்றும் உடல் மீது ஊற்றிக் கொண்டு தீகுளிக்க முயற்சித்தார். உடனடியாக காவல் துறையினர் அவரை தடுத்து நிறுத்தி, வாலியிலிருந்த குடிநீர் அவர் மீது ஊற்றி, முதலுதவி செய்து, பின்னர் முதியவர் காசியை ஆம்புலன்சில் ஏற்றி அழைத்து சென்றதுடன் தொடர்ந்து அவரிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

விவசாயிகள் அவர்களுக்கிடையே நிலத்தகராறு காரணமாக விவசாய முதியவர் ஆட்சியர் அலுவலகத்தில் தீகுளிக்க முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காவல் துறையினர் மக்கள் குறைதீர்வு முகாமுக்கு வருபவர்கள் சோதனை செய்த பின்னர்தான் உள்ளே அனுமதிக்கின்றனர். இருப்பினும் இந்த விவசாய முதிவயர் தீகுளிக்க முயன்றது காவல்துறையினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பு: மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு உள்ளே வரும் அனைவரையும் காவல்துறையினர் கடுமையான பாதுகாப்பும், கடுமையான சோதனையும் மேற்கொண்ட பின்னரே உள்ளே அனுமதிக்கின்றனர்.

## வேலூர் அடுத்த சின்ன அல்லாபுரத்தில் பாரதிய ஜனதா கட்சி சார்பில்

# நகர தலைவர் மதியழகன் மற்றும் மாவட்ட செயலாளர் நாகராஜன் ஆகிய தலைமையில் இலவச கண் சிகிச்சை முகாம்



வேலூர், ஜூலை.22-
வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சின்னல்லாபுரம் மந்தைவெளி எனும் பகுதி, 4வது மண்டலம் தெற்கு, டாக்டர். அகர்வால் மாவட்ட கண் பார்வை இழப்பு தடுப்பு சங்கம் உதவியுடன் பாரதிய ஜனதா கட்சி வேலூர் மாநகரம் சார்பில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம், பாரதிய ஜனதா கட்சி தொரப்பாடி நகர தலைவர் மதியழகன் மற்றும் பாஜக மாவட்ட செயலாளரும், வழக்கறிஞருமான நாகராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக பாஜக மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மருத்துவ முகாமை தொடங்கி வைத்தனர்.

இந்த மாபெரும் கண் சிகிச்சை முகாமில் பொது மக்கள் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண் சிகிச்சைக்கான முறைகளையும் மற்றும் கண் அறுவை சிகிச்சைக்கான விவரத்தையும் கேட்டறிந்து பயன் பெற்றனர். இதில் 16 பேர் கண் அறுவை சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 50க்கும் மேற்பட்டோருக்கு மருத்துவர்கள் கண் பரிசோதனை செய்து கண் கண்ணாடி இலவசமாக வழங்கினர்.

இந்நிகழ்வில் பாரதிய ஜனதா கட்சி தொரப்பாடி நகர மண்டல பொதுச் செயலாளர்கள் பாபு செல்வராஜ், மண்டல துணைத் தலைவர்கள் சசிகுமார் இளங்கோ மற்றும் பாஜக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள், டாக்டர் அகர்வால் மருத்துவமனை மருத்துவர்கள் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டு இந்த மாபெரும் கண் சிகிச்சை முகாமை சிறப்பித்தனர்.




# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி, ஜூலை.22-
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிட மிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 325 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து தமிழ்வளர்ச்சி துறை சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய்த்தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18ம் நாள் தமிழ்நாடு நாள் விழா என கொண்டாடப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் 04.07.2025 அன்று கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூ ரியில் வைத்து நடை பெற்றது. பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெற்ற மாணவி அமிர்தாவுக்கு ரூ.10,000மும், இரண்டாம் பரிசு பெற்ற மாணவன் இராஜபாலாஜிக்கு ரூ.7000மும், மூன்றாம் பரிசுப்பெற்ற மாணவி அஷிகாவுக்கு ரூ.5000மும், கட்டுரைப்போட்டியில் முதல் பரிசு பெற்ற மாணவி திவ்யாவுக்கு ரூ.10,000மும், இரண்டாம் பரிசு பெற்ற மாணவி மோனிஹாவுக்கு ரூ.7000மும், மூன்றாம் பரிசுபெற்ற மாணவன் ரினோஜித்க்கு ரூ.5000 பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, வழங்கினார்கள்.

# தக்கலை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா கலந்துரையாடல்



கன்னியாகுமரி, ஜூலை.22-
கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அரசு மேல்நிலைப்பள்ளி, மாணவர்களின் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா ஆய்வு மேற்கொண்டு, மாணவ மாணவியர்களை நேரில் சந்தித்து, கலந்துரையாடி, பேசுகையில்

தக்கலை கல்வி மாவட்டத்திற்குட்பட்ட தக்கலை அரசு மேல்நிலைப் பள்ளியில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் தேர்ச்சியை 100 சதவீதமாக கொண்டு வரும் நோக்கில் மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. பதினொன்றாம் வகுப்பில் பயிலும் மாணவர்கள், 11ஆம் வகுப்பு தேர்வில் முழுமையாக தேர்ச்சி பெற்றால் தான் 12 ஆம் வகுப்பில் எந்த இடையூறும் இன்றி பன்னிரண்டாம் வகுப்பு பாடத்தினை முழு கவனத்துடன் படிக்க இயலும். எனவே 11 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் விளையாட்டாய் பதினொன்றாம் வகுப்பை எதிர்கொள்ளாமல், கருத்துடன் படித்து நல்ல தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றால் மட்டுமே, மாணவர்கள் தாங்கள் விரும்புகிற உயர்கல்வியினை கல்லூரிகளில் பெற இயலும். கல்லூரிகளில் சேர்ந்து உயர்கல்வியினை பெற வேண்டும் என்கிற உயரிய குறிக்கோளோடு, அதிக மதிப்பெண் பெறுவதை இலட்சியமாகக் கொண்டு 12 ஆம் வகுப்பு மாணவர்கள் பாடங்களை படித்திடல் வேண்டும்.

சென்ற வருடத்தில் மாணவர்கள் ஒழுங்காக பள்ளிக்கு வராததினால் தான், தோல்வியை தழுவியுள்ளனர். எனவே அனைத்து மாணவர்களும் தவறாமல் ஒழுங்காக தினமும் பள்ளிக்கு வருகை புரிந்திடல் இன்றியமையாத ஒன்றாகும். தினமும் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை அன்றைய தினமே படித்திடல் வேண்டும். இது, தேர்வில் நல்ல மதிப்பெண்களை பெற்றுத்தரும். தற்போது, அனைத்து அரசு பள்ளிகளிலும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி வழிகாட்டுதல் சார்ந்த விழிப்புணர்வு 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களாகிய தாங்கள், உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரின் உதவியுடன் கிடைக்கப்பெறும் இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி, பன்னிரெண்டாம் வகுப்புக்கு பின் சேர வேண்டிய சிறந்த உயர் கல்வியினை திட்டமிட்டு, அதற்கான பயிற்சிகளிலும் தொடர்ந்து ஈடுப்படுதல் வேண்டும். மேலும் சென்ற வருடம் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரின் வழிகாட்டுதலோடு, கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த அரசு பள்ளி மாணவர்கள் சிலர், தேசிய அளவிலான முன்னணி கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயிலும் வாய்ப்பை பெற்றுள்ளனர். இந்த கல்வி ஆண்டிலும், பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் அதிகமான அரசு பள்ளி மாணவர்கள் தேசிய அளவிலான போட்டித்தேர்வுகளில் கலந்துகொண்டு, தேசிய முன்னணி கல்வி நிறுவனங்களில் பயிலும் வாய்ப்பை பெற வேண்டும். அதற்கான முயற்சிகளை தங்களது பள்ளி பாட ங்களின் ஊடே தொடர்ந் திடல் வேண்டும். மாணவர்கள், தேர்ச்சி ஒன்றை மட்டும் குறிக்கோளாக கொண்டு செயல்படாமல், அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்ற நோக்கில், தேவையற்ற விளையாட்டுகளை புறந்தள்ளி, கடின உழைப்புடன், படித்தால் அதிக மதிப்பெண்களை பெற இயலும். அதன் விளைவாக சிறந்த கல்லூரிகளில் உயர் கல்வியை தொடரும் நிலையை அடைய முடியும். கல்லூரி படிப்பு என்பது ஒவ்வொருவருடைய எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும் ஒன்றாகும். எனவே அத்தகைய கல்லூரி படிப்புக்கு தயாராகும் விதத்தில் அனைத்து மாணவர்களும் அதிக மதிப்பெண்ணுடன் வெற்றி பெற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் வில்லுக்குறி அரசு தொடக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு, முதலமைச்சரின் காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், மாணவர்களின் கற்றல் திறன் ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டு, மணவர்களுடன் கலந்துரை யாடினார்கள். நடைபெற்ற ஆய்வில் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் 23.07.2025 அன்று மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற உள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, ஜூலை.22-
எரிவாயு நுகர்வோர்களுக்கு சிலிண்டர் வழங்குவதில் காணப்படும் காலதாமதம் மற்றும் முறைகேடுகள் போன்ற குறைபாடுகளை களையும் பொருட்டு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் தேனி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து எண்ணெய் நிறுவன எரிவாயு முகவர்கள், எண்ணெய் நிறுவன மேலாளர்கள் மற்றும் எரிவாயு நுகர்வோர்கள் ஆகியோர்கள் கலந்து கொள்ளும் எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் 23.07.2025ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் எரிவாயு நுகர்வோர்களுக்கு எரிவாயு உருளைகள் வழங்குவதில் ஏற்படும் கால தாமதம் மற்றும் நுகர்வோர் குறைகளை பதிவு செய்து, நடவடிக்கை எடுப்பதில் எரிவாயு முகவர்களின் மெத்தனப் போக்கு உள்ளிட்ட குறைபாடுகள் தொடர்பான புகார்களை பெற்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

இக்குறைக்கேட்கும் கூட்டத்தில் எரிவாயு நுகர்வோர்கள் தங்களது புகார்கள் குறித்து தீர்வு பெற்றுக் கொள்ளலாம் என்பதால் நுகர்வோர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் நடவடிக்கை குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.




# வேலூர் மாவட்டத்தில் அரசு பள்ளியில் முதலிடத்தை பிடித்த மாணவனுக்கு விஐடி குழும ஸ்டார் திட்டத்தில் இட ஒதுக்கீட்டு ஆணை

வேலூர், ஜூலை.22-
வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் அரசு பள்ளியில் முதலிடங்களை பெற்ற மாணவர்களுக்கு விஐடியின் குழுமத்தின் சார்பில் ஸ்டார் திட்டத்தின் கீழ் இட ஒதுக்கீட்டுக்கான ஆணையினை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி வழங்கினார். இந்நிகழ்வின் போது விஐடி வேந்தர் டாக்டர். விஸ்வநாதன், கல்வித்துறை செயலாளர் டாக்டர். எஸ்.கண்ணப்பன், விஐடி துணைத் தலைவர் சங்கர் விஸ்வநாதன், கேதரிநாத், கமலநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வேளாண் இயந்திரங்கள் பயன்பாடு குறித்த கண்காட்சியினை துவக்கி வைத்து விவசாயிகள் பார்வையிட்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வேண்டுகோள்




இராமநாதபுரம், ஜூலை.22-
இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் வேளாண் இயந்திரங்கள் பயன்பாடு மற்றும் பராமரிப்பு குறித்து மாவட்ட அளவிலான கண்காட்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.முருகேசன் அவர்கள்; முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று வேளாண் இயந்திரங்கள் பயன்பாடு மற்றும் பராமரிப்பு கண்காட்சி அரங்கை திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

இக்கண்காட்சி அரங்கில் வேளாண் இயந்திரங்கள் பயன்பாடு மற்றும் சோலார் மின் இணைப்பு மூலம் மேம்பாடு குறித்த செயல் விளக்க கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு இதன் மூலம் வேளாண் இயந்திரங்களால் விலை நிலங்களில் உலவு செய்யும் முறை, நெல் நடவும் முறை, களை எடுக்கும் முறை, விளைநிலங்களில் வரப்பு கட்டுதல் போன்றவற்றிற்கு எவ்வாறு இயந்திரங்களை கையாளுதல் என்பது குறித்து பயிற்சியாளர்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தரிசு நிலங்களில் உலவு செய்யும் முறை பயன்பாடற்ற தென்னை மட்டை, கருவேல் மரம் போன்ற பொருள்களை அப்புறப்படுத்துவதற்கான இயந்திரங்களின் செயல்பாட்டு பணி குறித்தும் பயிற்சியாளர்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல் சோலார் மூலம் மின் இணைப்பு பயன்பாடு குறித்தும் செயல்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டன.

இக்கண்காட்சி அரங்குகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்ட அளவிலுள்ள விவசாயிகள் இதுபோன்ற கண்காட்சிகளில்; இயந்திரங்களின் பயன்பாடு குறித்து தெரிந்து கொண்டும், மேலும் மாநில திட்டத்தின் வேளான் இயந்திரங்கள் பெறுவது குறித்தும் தெரிந்து கொண்டு விவசாயிகள் பயன்பெற்ற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் வேளாண் துணை இயந்திரமாக்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அரசு மானியத்தில் வேளாண் இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து வேளாண்மை துறையின் மூலம் மண் பரிசோதனை செய்வதற்கான நடமாடும் வாகன சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.முருகேசன் அவர்கள் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.முத்துக்குமார் அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) திரு.பாஸ்கரமணியன் அவர்கள், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் திருமதி.ஜூனு அவர்கள், வேளாண்மைத்துறை உதவி செயற்பொறியாளர்கள் திரு.வெங்கழி;டஷன் அவர்கள், திரு.பாண்டியராஜன் அவர்கள், வேளாண் அறிவியல் நிலையம் பேராசிரியர் திரு.வள்ளல் கண்ணன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கடையநல்லூரில் அய்யாக்கண்ணு தலைமையில் செயல்படும் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம்

கடையநல்லூர், ஜூலை.22-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தாலுகா பகுதியில் அய்யாக்கண்ணு தலைமையில் செயல்படும் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வட்டார தலைவர் சின்னச்சாமி தலைமையில் நடைபெற்றது கூட்டத்திற்கு முருகன், சகாபுத்தீன், மணிகண்டன், மாரியப்பன், சதகத்துல்லாஹ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்

வட்டாரதுணை தலைவர் யூனுஸ் அனைவரையும் வரவேற்றார்

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தேசிய தென்னிந்திய நதிகள் இணை ப்பு விவசாயிகள் சங்க மாநில துனைசெயலாளார் ராமமூர்த்தி, ஜாகீர்உசேன், மாநில துணைதலைவர் கண்ணையா, தென்காசி மாவட்ட செயலாளர் புண்ணைவனம், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார் இதில் கார்திக், சுப்பையா, கணேசன் ,மசூது, கபூர், சாகுல் கமீது, மாலிக், முகம்மது அலி. உட்பட 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வனம் விலங்குகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு வாழ்நாள் முழுவதும் இழப்பீடு வழங்க வேண்டும், பயிர்வாரியாக இழப்பீடு வழங்க வேண்டும், நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் பணம் வசூலிப்பதை தடை செய்ய வேண்டும், தெலுங்கானாவைப் போன்று விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க வேண்டும், கேரளாவை போன்று காட்டுப் பன்றிகளை விவசாயிகளே சுட்டுக் கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும், அனைத்து மதகுகளையும் தூர்வாரப்பட வேண்டும் கருப்பாநதி அணையை உயர்த்த வேண்டும் பாப்பாங்கால் வாயில் உள்ள ஆக்கிரமிப்பு அனைத்தும் முழுமையாக அகற்றப்பட வேண்டும், ஊத்துமலை,இரட்டைக் குளம் கால்வாய் திட்டத்தை பெரியகுளம் வரை அமல்படுத்த வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்..

# மணி மங்கலம் பாரதி நகர் தேவி கருமாரியம்மன் கோயில் தீ மிதி திருவிழா

ஸ்ரீபெரும்புதூர், ஜூலை.22-

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் பாரதி நகர் ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கோயில் 25ஆண்டு தீமிதி திருவிழா ஞாயிற்றுக்கிழளமை நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துக்கொண்டு தீ மிதித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட பாரதி நகர் பகுதியில் அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் 29 ஆம் ஆண்டு கூழ் வார்த்தல் திருவிழாவும், 25 ஆம் ஆண்டு தீமிதி திருவிழா கடந்த 10ம் தேதி கணபதி ஹோமம், பந்தக்கால் நடும் நிகழ்ச்சி மற்றும் தீ மிதிக்கும் பக்தர்களுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. இதையடுத்து புதன்கிழமை கிராம தேவதைகளான செல்லியம்மன், ஸ்ரீதாமரை கன்னியம்மன், கங்கையம்மனுக்கு அபிஷேகம் மற்றும் தீபாரதனை நடைபெற்றது. இதையடுத்து வெள்ளிக்கிழமை இரவு ஊஞ்சல் சேவை உற்சவமும், சனிக்கிழமை சக்திகரகம்



திருவீதி உலாவும், ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீ தேவி கருமாரியம்மனுக்கு அபிஷேகம், மகா தீபாரதனையுடன் கூழ் வார்த்தல் நிகழ்ச்சியும், மாலை தீமிதி திருவிழாவும் நடைபெற்றது. இதில் மாலை அணிந்து விரதம் இருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் தீமித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

தீ மிதி திருவிழாவை முன்னிட்டு மூலவர் ஸ்ரீதேவி கருமாரியம்மன் சந்தனகாப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதையடுத்து வாண வேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்று பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. இதில் மணிமங்கலம் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துக்கொண்டு ஸ்ரீதேவி கருமாரி அம்மனை தரிசனம் செய்து சென்றனர்.

நடைபெற்றது. இதில் சிறப்பு அலங்காரத்தில் உற்சவர் ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் கோயில் வளாகத்தில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்த நிகழ்ச்சியில் மணிமங்கலம் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டு சென்றனர்.

# வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் மற்றும் டெம்சியா சார்பில் தென்காசியில் மாபெரும் தொழில் மற்றும் வர்த்தக கண்காட்சி : 2 நாட்களில் 10,000க்கும் அதிகமானோர் பங்கேற்பு

தென்காசி, ஜூலை.22-

தென்காசி மாவட்டம் வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் மற்றும் தென்காசி மாவட்ட குரு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் (டெம்சியா) இணைந்து நடத்திய மாபெரும் தொழில் மற்றும் வர்த்தக கண்காட்சி தென்காசி இசக்கி மஹாலில் 19 மற்றும் 20ம் தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. இதில் தென்காசி மாவட்ட வர்த்தகர்கள், ஸ்டார்ட் அப்கள், மாணவர்கள், பொதுமக்கள் என 10,000க்கும் அதிகமானோர் பங்கேற்று கண்காட்சியைப் பார்வை யிட்டு பயனடைந்தனர்.

இந்த கண்காட்சியில் வங்கிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், தொழிற்கூடங்கள், விவசாயப் பொருட்கள், டிரோன் டெக்னாலஜி, அழகு சாதனப் பொருட்கள், உணவுப் பொருட்கள் என பல்வேறு துறைகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் இடம்பெற்றிருந்தன.

முன்னதாக 19ம் தேதி காலை கண்காட்சியின் தொடக்க விழா நடைபெற்றது. டெம்சியா தலைவர் சி.அன்பழகன், வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் நிறுவனர் ஆனந்தன் அய்யாசாமி ஆகியோர் தலைமை தாங்கினர்.

ஆனந்தன் அய்யாசாமி



பேசுகையில், சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் வேலை இல்லாதது தான். புதிய தொழில் நிறுவனங்களால் மட்டும் தான் வேலைவாய்ப்பை உருவாக்க முடியும். அதனாலேயே புத்தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையிலும், வழிகாட்டும் வகையிலும் இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளோம். வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக வாய்ஸ் ஆப் தென்காசி தொடர்ந்து பல முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது, என்றார்.

டெம்சியா நிறுவனர் ஆதரவாளர் எம்.ஆர்.அழகுராஜா, ஆலோசகர் எஸ்.ராமன், துணைத்தலைவர்கள் எஸ்.டி.முருகேசன், ஏ.வெங்கடேஷ்ராஜா, வாய்ஸ் ஆப் தென்காசி தலைமை நிர்வாக அதிகாரி கே.காருண்யா குணவதி, பிரிவு தலைவர்கள் டாக்டர் எஸ்.சங்கிலி விக்ரம்குமார், ஆர்.லட்சுமணன் ஆகியோர் விழாவுக்கு முன்னிலை வகித்தனர்.

நிழ்ச்சியில் நேச்சுரல்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனர் சி.கே.குமரவேல் சிறப்பு விருந்தினராக பங்கேற்றுப் பேசினார். அவர் பேசுகையில், தொழிலில் பிராண்டிங் என்பது மிகவும் முக்கியமானதாகும். எனவே பிராண்ட்டை உருவாக்குவதற்காக முனைப்புடன் செயல்பட வேண்டும், என்றார். யெல்டி சாஃப்ட்காம் பிரைவேட் லிமிடெட் நிறுவனர் ரா.அர்ஜுனமூர்த்தி சிறப்புரையாற்றினர். ஜோஹோ நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி பத்மஸ்ரீ திரு.ஸ்ரீதர் வேம்பு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விழாப்பேருரை யாற்றினார். அவர் பேசுகையில், எந்த ஒரு தொழில் தொடங்கினாலும் தாமதிக்காமல் வேலையைத் துவங்க வேண்டும். தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். வெற்றி பெறுவதற்கு சில காலம் ஆகலாம். ஆனால் தொடர்ந்து முழு வீச்சோடு இலக்கு களோடு முயன்றால் நிச்சயம் வெற்றி கிடைக்கும், என்றார். செந்தில்கணேஷ், செயலாளர் TEMSEA நன்றி கூறினார்.

இரண்டாம் நாளான 20ம்தேதி (ஞாயிற்றுக் கிழமை) முதலீட்டாளர்கள் தலைமையில் இளம் தொழில் முனைவோர்கள் பங்கேற்ற பிட்ச் போட்டி நடந்தது. அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடந்தன. மேலும் ஸ்டார்ட்அப் டி.என். மூலமாக வந்த 40 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுடனான பிரத்யேக கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஜோஹோ முதன்மை விஞ்ஞானி திரு. ஸ்ரீதர் வேம்பு அவர்கள் பங்கேற்று தனது அனுபவங்கள், வழிகாட்டல்களை இளம் தலைமுறைக்கு எடுத்துரைத்தார். அதோடு ஸ்டார்ட்அப்களின் தொழில் சார்ந்த கேள்விகளுக்கு பதில் அளித்தார். பின்னர் வாய்ஸ் ஆப் தமிழ்நாடு நிறுவனர் ஆனந்தன் அய்யாசாமி நடுவராக அமர்ந்து ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தினார். “கிராமம் மற்றும் நகரங்களில் புதிய தொழில் நிறுவனங்களை பெரிதாக்குவது எப்படி? என்ற தலைப்பில் நடந்த இந்த கலந்துரையாடல் குறு மற்றும் சிறுதொழில் புரியும் பலருக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

2 நாட்களும் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த கண்காட்சியின்போது தொழில் முனைவோர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. சிறு தொழில் புரிவோர், ஸ்டார்ட் அப்கள், மாணவர்கள் என பல்வேறு தரப்பினரும் வெற்றிபெற்ற தொழில் அதிபர்களை நேரில் சந்தித்து தங்கள் தொழிலுக்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றனர். வாய்ப்பினைப் பெறலாம். அதேப்போல, வணிகச் சிக்கலுக்கான தீர்வு, நேரடி ஆலோசனை, கலந்தாய்வுகள், புதுமைத் தொழில்கள், கிராமப்புற புத்தொழில்கள், தொழில் விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு தலைப்பு களில் சிறப்பு விருந்தினர்கள் பேசினார்கள்.



■ சென்னையில் 2025 ஆகஸ்ட் 3 முதல் 12 வரை நடைபெறும் ஆசியச் அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டியை சிறப்பாக நடத்துவதற்கு தமிழ்நாடு அலைச்சறுக்கு சங்கத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் 2 கோடி மதிப்புள்ள காசோலை நேற்று 21/7/2025 அதுல்ய மிஸ்ரா வழங்கினார் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஷா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட வருவாய் அதிகாரி மணிகண்டன் பொது மேலாளர் சுஜாதா மற்றும் தமிழ்நாடு அலைச்சறுக்கு சங்கத்தின் தலைவர் அருண் வாசு ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பெற்றுக்



# காரைக்குடியில் தமிழ்நாடு யோகா பெடரேசன் மற்றும் சாய் மகிழ் யோகா பயிற்சி மையம் இணைந்து நடத்தும்மாநில அளவிலான யோகா போட்டி நடைபெற்றது

காரைக்குடி, ஜூலை.22-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 20.7.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு யோகா பெடரேசன் மற்றும் சாய் மகிழ் யோகா பயிற்சி மையம் இணைந்து நடத்தும் மாநில அளவிலான யோகா போட்டி, தமிழ்நாடு யோகா பெடரேசன் சிவகங்கை மாவட்ட செயலாளர் யோகா ஆச்சார்யா புவனேஸ் தலைமையில் விழா துவங்கியது இதில் அழகப்பா கலை அறிவியல் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் கருணாகரன் தமிழ்நாடு யோகா பெடரேசன் மாநிலச் செயலாளர் பரணி வெங்கடேசன், தொழில் அதிபர் அறிவு மருத்துவர் சரவணன் நல்லாசிரியர் சுதாகர் ஓவிய ஆசிரியர் கணேசன் மற்றும் சாய் மகிழ் அறக்கட்டளையின் செயலாளர் சுருதி ஆகியோர் கலந்து கொண்டார்கள். யோகா போட்டியானது மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டது, அதில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக மிதிவண்டியும், பரிசுக்கோப்பையும் சான்றிதழும் வழங்கப்பட்டது. யோகா போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் வாழ்த்துக்கள் கூறி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.



# மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்: ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தகவல்

திருப்பூர், ஜூலை.22-

திருப்பூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் ஊரக உள்ளாட்சி மன்றங்களில் தலா ஒரு மாற்றுத்திறனுடைய நபரை நியமன உறுப்பினராக நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 265 கிராம ஊராட்சிகளிலும், 13 ஊராட்சி ஒன்றியங்களிலும், 1 மாவட்ட ஊராட்சி க்கும் தலா ஒரு மாற்றுத்திறனுடைய நபரை நியமன உறுப் பினராக நியமனம் செய்யும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 01.07.2025 முதல் 31.07.2025 முடிய அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிக்னறன.

தகுதிகள், நிபந்தனைகள்:

கிராம ஊராட்சி மன்றத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் அந்த கிராம ஊராட்சியில் வசிப்பவராகவும், ஊராட்சி ஒன்றியத்திற்க்கு விண்ணப்பிப்பவர்கள் அந்த ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏதேனும் ஒரு கிராம ஊராட்சியில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் மாற்றுத்திறனுடைய நபராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள்,



விண்ணப்பிக்கும் நாளிலோ அதற்கு முன்னரோ 21 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளிக்கான சான்று வழங்க அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து பெறப்பட்ட செல்லத்தக்க வகையிலான மாற்றுத்திற னாளிக்கான சான்று வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட இயலாமையில் 40சதவீதம் அளவிற்க்கு குறையாத மாற்றுத்திறனாளியாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் படிவம் - 1ல் விண்ணப்பங்களை ரூ.20க்கும் குறையாத முத்திரை கட்டணத் தாளில் கையொப்பமிட்ட உறுதிமொழி படிவத்துடன் சான்றுறுதி அலுவலரின் முன்னிலையில் விண்ணப்பிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள தகுதியுடைய மாற்றுத்திறனாளிகள் அதற்கான உரிய விண்ணப்பப் படிவத்தினை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து பெற்று விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து உரிய சான்றுகளுடன் 31.07.2025க்குள் கிராம ஊராட்சி மன்றத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமும் (கிராம ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்திற்க்கு விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமும்,

(வட்டார ஊராட்சி, மாவட்ட ஊராட்சிக்கு விண்ணப்பிப்பவர்கள் திருப்பர் மாவட்ட ஊராட்சி செயலரிடமும் மற்றும் பேருராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் வசித்து வரும் தகுதியான மாற்றுத்திறனாளிகள் தொடர்புடைய பேருராட்சி, நகராட்சி, மாநகராட்சி செயல் அலுவலர் / ஆணையாளரிடம் 31.07.2025 அன்று மாலை 03.00 வரை விண்ணப்பம் செய்யலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே

# பழனி புது ஆயக்குடி சந்தைப்பேட்டை அருகே அரசு பேருந்து நிற்காமல் செல்வதால் பொதுமக்கள் அவதி

திண்டுக்கல், ஜூலை.22-

திண்டுக்கல் மாவட்டம் பழனி புது ஆயக்குடி திண்டுக்கல் செல்லும் சாலை சந்தைப் பேட்டை அருகே ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர் இவர்கள் விவசாயத் தொழில் நம்பி வாழ்ந்து வருகின்றனர். குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு. பொதுமக்கள் அரசு அலுவலகங்கள் மருத்துவமனை. முக்கிய தேவைக்காக பழனி நகரத்திற்கு செல்ல சரியான நேரத்தில் பேருந்துகள் அந்த இடத்தில் நிற்காத காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்நிலையில், பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் விவசாயிகள் அரசு அலுவலகத்திற்கு செல்லும் நேரத்தில் இயக்கப்படும் அரசுப் பேருந்துகள், நிற்பதில்லை என புகார் எழுந்துள்ளது. எனவே பேருந்துகளை தவற விடுவது வழக்கமாகி விட்டதாக மாணவர்கள் வேதனை தெரிவித்தனர். மேலும் அவளியாக இரவு நேரங்களில் அந்த இடத்தில் பேருந்து நிற்காத காரணத்தால் அரை கிலோமீட்டர் அப்பால் சென்று பயணிப்பது தொடர்கதையாகவே உள்ளது என கூறுகின்றனர். ஆகையால் பழனி அரசு போக்குவரத்து அலுவலகத்திற்கு பொதுமக்கள் தாங்கள் கோரிக்கைகளை கூறினார். விரைவில் அவ்விடத்தில் பஸ் நிறுத்தப்படும் எனக் கூறினர் இந்நிகழ்வில் களஞ்சியம். செல்வம் ஈஸ்வரமூர்த்தி சுந்தரம் சங்கர பாண்டி பழனிச்சாமி மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161